அதிகபட்சம் ரூ.70-ல் இருந்து ரூ.50 ஆகிறது

# மெட்ரோ ரயில் கட்டணம் குறைப்பு

## ● நாளை முதல் அமலுக்கு வரும் என முதல்வர் பழனிசாமி அறிவிப்பு

■ சென்னை

சென்னையில் மெட்ரோ ரயில் கட்டணம் நாளை முதல் குறைக்கப்படுகிறது. அதிகபட்ச கட்டணம் ரூ.70-ல் இருந்து 50 ஆக குறைக்கப்பட்டுள்ளதாக முதல்வர் பழனிசாமி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை:

சென்னை மாநகரத்தை உலகத் தரத்துக்கு மேம்படுத்த பல்வேறு சிறப்பான உள்கட்டமைப்பு திட்டங்களை மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வகுத்து செயல்படுத்தினார். சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக, மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்த தேவையான நிதி ஒதுக்கினார்.

**7 கோடியே 25 லட்சம் பயணிகள்**

அரசு மிகுந்த முனைப்புடன் செயல்படுத்தியதால் மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் கட்டம் முழுமையாக முடிக்கப்பட்டு, பல்வேறு வழித்தடங்களில் 54.15 கி.மீ. நீளத்துக்கு பயணிகள் சேவை சிறப்பாக நடந்து வருகிறது. 118.90 கி.மீ. நீளத்திலான மெட்ரோ ரயில் 2-ம் கட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. கடந்த 2015 ஜூன் 29-ம் தேதி மெட்ரோ ரயில் நிறுவனம் பயணிகள் சேவையை தொடங்கியது. தற்போது 6-ம் ஆண்டில் தனது சேவையை தொடர்கிறது. இதுவரை 7 கோடியே 25 லட்சம் பயணிகள் மெட்ரோ ரயில் சேவைகளை பயன்படுத்தி உள்ளனர்.

மெட்ரோ ரயில் சேவையை பெரும்பாலானோர் பயன்படுத்தும் வகையில், அதன் கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று பொது மக்களிடம் இருந்து கோரிக்கைகள் வந்தன. இதை ஏற்று, சென்னை மெட்ரோ ரயில் கட்டணம் குறைக்கப்படுகிறது.



தற்போது 2 கி.மீ. வரை ரூ.10 என்ற கட்டணத்தில் மாற்றமில்லை. 2 முதல் 5 கி.மீ வரை 20 ரூபாய், 5 முதல் 12 கி.மீ. வரை 30 ரூபாய், 12 முதல் 21 கி.மீ. வரை 40 ரூபாய், 21 முதல் 32 கி.மீ. வரை 50 ரூபாய் என புதிய கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- கியூ ஆர் கோடு மற்றும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் தொடுதல் இல்லா மதிப்புக்கூட்டு பயண அட்டை மூலம் பயணிப்பவர்களுக்கு மேலும் கூடுதலாக அனைத்து பயணச் சீட்டுகளுக்கும் அடிப்படை கட்டணத்தில் இருந்து 20 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படும்.
- ஒரு நாள் வரையறுக்கப்படாத மெட்ரோ பயண கட்டணம், 45 கி.மீ. வழித்தடப் பகுதிகளுக்கு ரூ.100 ஆக உள்ளது. தற்போது தொடங்கப்பட்டுள்ள வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரையிலான 9 கி.மீ. நீள கூடுதல் வழித்தடத்துக்கும் சேர்த்து மொத்தம் 54 கி.மீட்டருக்கும் அதே ரூ.100 கட்டணமே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- அதேபோல ஒரு மாத வரையறுக்கப்படாத மெட்ரோ பயண கட்டணம் தற்போது 45 கி.மீ. வழித்தடப் பகுதிகளுக்கு ரூ.2,500 ஆக உள்ளது. வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரையிலான 9 கி.மீ. சேர்த்து மொத்தம் 54 கி.மீ வழித்தடத்துக்கும் அதே ரூ.2,500 கட்டணமே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாட்களில் வரையறுக்கப்படாத பயண அனுமதி சீட்டுகள், வரையறுக்கப்பட்ட நாட்களில் செல்லுபடியாகும் அனுமதிச் சீட்டுகள் தவிர மற்ற பயணத்துக்கு கட்டணத்தில் இருந்து 50 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படும்.

இந்த உத்தரவு பிப்.22-ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. இந்த கட்டணக் குறைப்பை பயன்படுத்தி பொதுமக்கள் தங்கள் பயணங்களை குறைந்த செலவில் நிறைவாக மேற்கொள்ளலாம்.

இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

**அதிகபட்ச கட்டணம்**

குறைக்கப்பட்டுள்ள மெட்ரோ ரயில் கட்டணங்களை பொறுத்தவரை, 5 கி.மீ. வரை பயணிப்போருக்கு ரூ.30 என இருந்தது, தற்போது ரூ.20 ஆக குறைக்கப்பட்டுள்ளது. 12 கி.மீ. வரை பயணிப்போர் முன்பு ரூ.40 செலுத்த வேண்டும். அந்த கட்டணம் தற்போது ரூ.30 ஆக குறைக்கப்பட்டுள்ளது. 12 முதல் 18 கி.மீ. வரை ரூ.50-ம், 18 முதல் முதல் 24 கி.மீ வரை பயணிப்போர் ரூ.60-ம் செலுத்த வேண்டியிருந்தது. தற்போது 12 முதல் 21 கி.மீ. வரை ரூ.40 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

முன்பு 24 கி.மீ.க்கு மேல் ரூ.70 என்பது அதிகபட்ச கட்டணமாக இருந்தது. தற்போது அதை 21 முதல் 32 கி.மீ. வரை என மாற்றி ரூ.50 ஆக கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 32 கி.மீ வரை பயணிப்போருக்கு ரூ.20 மிச்சமாகும். ஆனால், விம்கோ நகர் வரையிலான 54 கி.மீ. தூரத்துக்கான முழுமையான கட்டணம் குறிப்பிடப்படவில்லை.

| தற்போதைய கட்டணம் | |
|---|---|
| 2 கி.மீ. வரை | ரூ.10 |
| 2 முதல் 4 கி.மீ. வரை | ரூ.20 |
| 4 முதல் 6 கி.மீ. வரை | ரூ.30 |
| 6 முதல் 12 கி.மீ. வரை | ரூ.40 |
| 12 முதல் 18 கி.மீ. வரை | ரூ.50 |
| 18 முதல் 24 கி.மீ. வரை | ரூ.60 |
| 24 கி.மீட்டருக்கு மேல் | ரூ.70 |

| புதிய கட்டணம் | |
|---|---|
| 2 கி.மீ. வரை | ரூ.10 |
| 2 முதல் 5 கி.மீ. வரை | ரூ.20 |
| 5 முதல் 12 கி.மீ. வரை | ரூ.30 |
| 12 முதல் 21 கி.மீ. வரை | ரூ.40 |
| 21 முதல் 32 கி.மீ. வரை | ரூ.50 |